16.08.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண்.375 /2021</u>

அ.சா.9

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பெரியசாமி | | |
| த/பெ | சக்கரபாணி | | |
| கிராமம் | சிவபெருமான்பாளையம் | தொழில் | |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 43/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது தச்சு தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன ஐய்யப்பன் என்பவர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர் அவரை எனக்கு தெரியும். எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் 3 ஒப்புதல் வாக்குமூலங்கள், 3 கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையது அல்ல. இந்த வழக்கில் ஐய்யப்பன் எவ்வாறு இறந்தார் என்று எனக்கு தெரியாது. போலீசார் எங்கள் முன்னிலையில் எதிரிகள் யாரையும் விசாரித்தார்களா என்றால் இல்லை. எங்கள் முன்னிலையில் எந்த பொருட்களையும் எடுத்து அவர்கள் ஆஜர் செய்யவில்லை. இது சம்மந்தமாக போலீசார் என்னை பார்த்தார்களா என்றால் நான் அப்போது ஊரிலேயே இல்லை. என்னை விசாரிக்கவில்லை. சம்பவத்திற்கு பிறகு 14 நாட்கள் கழித்து ஊருக்கு வந்தேன். ஆனால் அவர் எவ்வாறு இறந்தார் எனக்கு தெரியாது.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த 26.04.2021ந் தேதி மாலை சுமார் 4 மணியளவில் எங்கள் ஊரைச் சேர்ந்த தியாகராஜன் மகன் பச்சையப்பன் என்பவரும், நானும், பனையபுரம் கூட்ரோட்டில் நின்று

பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது விக்கிரவாண்டி காவல் ஆய்வாளர் அவர்கள் எங்கள் ஊர் ஐய்யப்பன் கொலை வழக்கு சம்மந்தமாக எங்கள் ஊரைச் சேர்ந்த எதிரிகள் சரத்குமார், சரவணன், குமரவேல், ஜானகி ஆகியோர்களை விசாரித்துக்கொண்டிருந்தார்கள் என்றும், எங்களை சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டார் என்றும், அவர்கள் அனைவரும் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தனித்தனியே ஆய்வாளர் பதிவு செய்தார் என்றும், அதில் தன் குடும்ப பிரச்சனைகள் பற்றியும், கடந்த 25.04.2021ந் தேதி 1ம் எதிரியின் அம்மாவை அடித்த ஐயப்பன் திருக்கனூர் ஏரிக்கரையில் மறைந்திருக்கிறார் என்று, 1ம் எதிரி 2ம் எதிரியிடம் சொன்னதாகவும், அன்று மதியம் 12 மணியளவில் 1ம் எதிரி சரத்குமாருக்கு சொந்தமாக PY05H1570 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் 1, 2 எதிரிகள் ஐய்யப்பனை ஏற்றிக்கொண்டு சிவபெருமான்பாளையம் வந்து முனியம்மான் வீடு கட்டும் ரோட்டில் வைத்து 1ம் எதிரி ஐய்யப்பனை டேய் தேவிடியா பையா எப்படி என் அம்மாவை அடிப்ப என்று திட்டினார் என்றும், அவர் கையில் வைத்திருந்த மரக்கட்டிலின் கால்கட்டையால் இத்தோடு ஒழிந்துபோடா என்று சொல்லி பின்பக்க தலை, உடல் முழுவதும் அடித்தார் என்றும்,2ம் எதிரி ஐய்யப்பனை பார்த்து தேவிடியா மகனே என் மனைவியை அடிப்பியா என்று திட்டி, கையில் வைத்திருந்தா இரும்பு ஸ்பேனரால் முகவாய் கட்டை மற்றும் வலது உள்ளங்கையில் அடித்தார் என்றும், இதை தடுக்க வந்து ஐய்யப்பனின் மனைவி நதியாவை கிட்ட நெருங்க விடாமல் 3, 4 எதிரிகள் தள்ளி விட்டதாகவும், வலி தாங்கவிடமுடியாமல் அங்கிருந்த ஓடிய ஐய்யப்பனை 3,4 எதிரிகள் எங்கடா ஓடுகிறாய் தேவிடியா பையா என அசிங்கமாக திட்டி, பழனி என்பவரின் வீட்டின் பின்புறம் உள்ள இடத்தில் கீழே தள்ளி 3ம் எதிரி கையில் வைத்திருந்த தடியால் ஐய்யப்பனை சரமாரியாக உடல் முழுவதும் அடித்ததாகவும், 4ம் எதிரி கையாலும், காலாலும் ஐய்யப்பனை அடித்ததாகவும், அங்கிருந்தவர்கள் சத்தம் போட்டார்கள் என்றும், பிறகு ஐய்யப்பனை அங்கிருந்து பிள்ளையார் கோவில் வாட்டர் டாங்க் அருகில் அழைத்து சென்று எதிரிகள் 4பேரும் சேர்ந்து தாக்கியதாகவும், அக்கம்பக்கத்தினர் ஓடிவருவதை பார்த்து அவர்கள் அங்கிருந்த ஓடிவிட்டதாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தில் எங்கள் முன்னால் சொன்னார்கள் என்றும், அதை ஆய்வாளர் பதிவு செய்தார்கள். அதில் நாங்கள் கையொப்பம் இட்டோம் என்றும் சொன்னால் சரியல்ல.

பிறகு அந்த ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் எங்களை அழைத்து சென்றால் ஆயுதங்களை மறைத்துவைத்திருக்கும் இடத்தை காட்டுகிறோம் என்றும் கூறினார்கள் என்றும், அதன் அடிப்படையில் எங்கள் முன்னிலையில் 1ம் எதிரி சரத்குமார் ஐய்யப்பனை தாக்க பயன்படுத்திய மரக்கட்டில் கால்கட்டை, அவரை அழைத்து வந்த இருசக்கரவாகனத்தையும் அவரது வீட்டிற்கு பின்புறம் உள்ள மாட்டுகொட்டகையில் மறைத்துவைத்திருந்ததை மாலை 5.30 மணியளவில் எடுத்து ஆஜர் செய்ததை கைப்பற்றுதல் மகசர்களில் கைப்பற்றினார்கள். அதில் நாங்கள் இருவரும் கையொப்பம் இட்டோம் என்றும்,

2ம் எதிரி சரவணன், ஐய்யப்பனை அடிக்க பயன்படுத்திய இரும்பு ஸ்பேனரை வீட்டின் பின்புறம் மறைத்துவைத்திருந்ததை 6 மணியளவில் எடுத்து ஆஜர் செய்ததை கைப்பற்றதல் மகசர்களில் கைப்ற்றினார்கள் என்றும் அதில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும்,

3ம் எதரி குமரவேல் ஐய்யப்பனை அடிக்க பயன்படுத்திய மரக்கட்டையை தனது ஊரில் உள்ள வாட்டர் டேங்க் பின்புறம் மறைத்து வைத்து இருந்ததை சுமார் 6.30 மணியளவில் எடுத்து ஆஜர் செய்ததை கைப்பற்றுதல் மகசர்களில் கைப்பற்றிக்கொண்டார்கள் என்றும் அதில் நாங்கள் இருவரும் சாட்சி கையெழுத்து செய்தோம் என்றும், அவ்வாறு எல்லாம் சொல்லிவிட்டு தற்ே பாது எதிரிகள் கேட்டுகொண்டதன் பேரில் அவர்களை காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையயை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை**

**மறுவிசாரணை**

**இல்லை.**